செ. கு. எண்:051 நாள் :17.02.2016

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 17.2.2016

4.1.2016 அன்று கடலூர் மாவட்ட காவல் கட்டுப்பாட்டு அறையில் சிறப்பு உதவி ஆய்வாளராக. பணி புரிந்த திரு. N.முருகேசன்;

5.1.2016 அன்று சேலம் மாநகரம், அரசு பொது மருத்துவமனை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்த திரு. M.ஜெயராமன்;

6.1.2016 அன்று விழுப்புரம் மாவட்டம், சின்னசேலம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்த திரு. C.சாமிதுரை;

10.1.2016 அன்று நாமக்கல் மாவட்டம், எலச்சிபாளையம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணி புரிந்த திரு. K.நடராஜன்;

11.1.2016 அன்று நீலகிரி மாவட்டம், தேனாடுகம்பை காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்த திரு. B.தருமன்;

17.1.2016 அன்று திருவாரூர் மாவட்டம், கோட்டூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்த திரு. R.வெங்கட்ராமன்;

18.1.2016 அன்று திருநெல்வேலி மாநகர ஆயுதப்படை, 3ம் படை பிரிவில் உதவி ஆய்வாளராகப் பணி புரிந்த திரு. S.செல்லதுரை;

22.1.2016 அன்று தருமபுரி மாவட்டம், ஏரியூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்த திரு. M.வடிவேல்;

27.1.2016 அன்று திருவண்ணாமலை மாவட்டம், ஜமுனாமரத்தூர் காவல் நிலையத்தில் இரண்டாம் நிலைக் காவலராகப் பணி புரிந்த திரு. R.ரமேஷ்;

31.1.2016 அன்று சென்னை பெருநகர காவல், மயிலாப்பூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்த திரு. R.கோபால்;

——— ஆகியோர் உடல்நலக் குறைவால் காலமானார்கள் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

6.1.2016 அன்று திருச்சிராப்பள்ளி மாவட்டம், மாவட்ட குற்ற பதிவேடுகள் கூடத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்த திரு. A.குமரேசன்;

12.1.2016 அன்று சிவகங்கை நகர காவல் நிலையத்தில் இரண்டாம் நிலைக் காவலராகப் பணி புரிந்த திரு. K.சதீஷ்;

15.1.2016 அன்று திருவண்ணாமலை மாவட்டம், களம்பூர் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்த திரு. R.புருஷோத்தமன்;

25.1.2016 அன்று சென்னை பெருநகர காவல், ஆவடி டேங்க் தொழிற்சாலை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்த திரு. D.சீனிவாசன்;

——— ஆகியோர் சாலை விபத்துகளில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

பல்வேறு நிகழ்வுகளில் மேற்கண்ட தேதிகளில் உயிரிழந்த இந்த **14** காவலர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், மறைந்த காவலர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**